1974 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோருடைய வீட்டிலும் இப்பொழுது ரேடியோ எந்த அடிப்படையில் இருக்கிறதோ அந்த அடிப்படையில் எல்லோருடைய வீட்டிலும் டெலிவிஷன் இருக்கும் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு).

சிறுவர்களுக்கான திரைப்படங்கள்.

* 372 வினா— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுவர்களுக்கென திரைப்படங்களை தமிழ்நாடு அரசு தயாரிக்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு சார்பாக தற்போது எந்த எந்த வகையான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பாக பல விளக்கப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. " கல்லும் சொல்லாதோ கவி " என்ற தலைப்பில் சிற்பம் பற்றிய படம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது. உயர் விளைச்சல் ரகங்கள், பயிர் பாதுகாப்பு, உரங்கள், நெடுங்கடல் மேலே, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தீ அணைப்பு, சீரணி, நெற்பயிர் வேளாண்மை, வாழ்க்கை வளம் பெற, மனம் ஒரு குரங்கு, அன்னையர் இருவர், இரண்டு வீடு, வளமான வாழ்வு, எந்த நாளும் காப்போம், பருத்தி வேளாண்மை, விசை தெளிப்பூச்சு பராமரிப்பு கிராம முன்னேற்றம், சுற்றுலா, விவசாயப் பயிற்சி விற்பனைக்கூடம் பரிசுச் சீட்டு, ரூரல் டெவலப்மென்ட் என்று இப்படிப்பட்ட தலைப்புகளில் தமிழ்நாடு அரசில் உள்ள பல்வேறு இலாகாக்களின் சார்பாகப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன் : திரைப்படங்கள் கல்வி போதிப்பிலே சிறந்த பணியைச் செய்ய முடியும் என்று பல அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் சிறுவர்களுக்கென திரைப்படங்களைத் தயாரிப்பது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிற நோக்கில் இந்த அரசாங்கம் இதுசம்பந்தமாக வருங்காலத்தில் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள, சிறுவர்களுக்கு அறிவுரை போதிக்கும் படங்கள் ஆங்காங்கே இருந்து வரவழைக்கப்பட்டு சிறுவர்களுக்கு போட்டுக் காட்டப்படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : "குழந்தைக்காக" என்று ஒரு சினிமாப் படம் வந்ததே அது குழந்தைகளுக்குப் போட்டுக் காண்பிக்கத்தக்க படமா ? அல்லது "குழந்தைக்காக" என்ற பெயர் மட்டும்தான் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை மாண்புமிகு உறுப்பினர் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன். நான் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கின்ற வகையில் இப்பொழுது திரைப்படக் கல்லூரியில் இருக்கின்ற மாணவர்களை வைத்து, குழந்தைகளுக்காக எடுக்கப்படுகின்ற படத்தைத் தயாரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே திரைப்படக் கல்லூரி மாணவர்களை வைத்து பல்வேறு தலைப்புகளில் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இங்கே எழுந்துள்ள கேள்வியின் அடிப்படையில் சிறுவர்களுக்கு அறிவு போதிக்கும் படம் எடுக்கலாமா என்பதைப்பற்றி யோசித்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : சிறந்த தமிழ் படங்களுக்கு பரிசு வழங்கக் கூடிய ஒரு திட்டம் தமிழ்நாட்டில் இருந்ததே, அந்தத் திட்டம் இப்பொழுது இருக்கிறதா ? அப்படியானால், குழந்தைகளுக்கென்று தனியார் யாராவது நல்ல படங்கள் எடுத்தால் அந்தப் படங்களுக்கு அப்படிப்பட்ட பரிசுகள் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறந்த தமிழ்ப் படங்களுக்கும் அதிலே பணியாற்றிய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் பரிசு அளிக்கும் திட்டம் ஒன்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால், அதிலே பரிசு பெறுபவர்கள் அந்தத் திட்டத்தைச் சரியான முறையில் மதிக்காத காரணத்தால் என் நமக்கு இந்த வம்பு என்று இதை சிறிது காலமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு தயாரித்திருக்கிற குடும்ப நலம் குறித்த படம் மிகச் சுவையாக இருக்கிறது, ஆனால், குடும்ப நலப் படங்களை குழந்தைகள் வேண்டாம் என்றாலும் உள்ளே வந்து பார்க்கிறார்கள். ஆகவே, குழந்தைகளுக்கு முன்பெல்லாம் சிவிக்ஸ் பாடமுறையினை கற்பிப்பதுபோல், சுகாதாரமுறை, சாலை விதிகள் ஆகியவற்றை 16 எம்.எம். படத்திலே காண்பிக்க உரிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே இதுபோன்ற படங்கள் இருக்கின்றன. அவற்றை நாமே தயாரிப்பதா என்பதுதான் பிரச்சினை பற்றுக்குறையாக இருக்குமானால் அப்படிப்பட்ட படங்களைத் தயாரிப்பதில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஆறுமுகம் : நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அரசு எடுக்கின்ற படங்கள் ஒழுக்கத்தைப்பற்றி போதிக்கும் வகையில் எடுக்கிறோம்

என்று குறிப்பிட்டார்கள். திரைப்பட உலகில் ஒழுக்கமே இல்லாத விதத்தில் இன்றைக்கு தமிழ்நாட்டில் தனியார்களால் படங்கள் எடுக்கப் படுகின்றன. ஒரு வரம்புக்குள், ஒரு ஒழுங்குக்குள் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில படங்களால் பொதுமக்களிடத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற சூழ்நிலை வந்தால்தான் மாநில அரசைப் பொறுத்தவரையில் அவைகளைத் தடுத்து நிறுத்த முடியும். அதற்கான பரிந்துரைகளைக்கூட மத்திய அரசுக்குச் செய்ய முடியும். ஆனால், படங்களில் ஆபாசமான காட்சிகள் இவைகள் வருவதைத் தவிர்ப்பதற்கு பொறுப்பு இன்றைக்கு தணிக்கைத் துறைக்குத்தான் இருக்கிறது. தணிக்கைத் துறை மாநில அரசின் வரம்புக்கு உட்பட்டதல்ல. மத்திய அரசின் வரம்புக்கு உட்பட்டதாகும். அதுபற்றி நேற்றையதினம் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் திரு. மொய்தீன் அவர்கள் வெகு விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால், கூடுமான வரையில் அந்தப் படங்களைத் தணிக்கை செய்தாலும்கூட, அந்தப் படங்கள் சம்பந்தமான போஸ்டர்கள் சுவர்களில் ஒட்டப்படுவதை ஒரு சட்டம் போட்டுத் தடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. நா. வெ. குருசாமி : நமது சட்ட மன்ற நிகழ்ச்சியைத் தொகுத்து ஒரு திரைப்படம் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சட்டமன்ற நிகழ்ச்சியைத் தொகுத்து படமாக்குவது என்றால் சில நேரங்களில் ஸ்டண்டு படம் போல இருக்கும்.

திரு. எம். தேவராசன் : அடையார் திரைப்படக் கல்லூரியில் பயின்று தேறுகிறவர்கள் பலர் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். என் மைத்துனர் ஒருவரே காமராமென்னாக அங்கே தேறி இன்றையதினம் வேலையில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே அங்கே பயின்று தேறுகிறவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தரும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கே பயிற்சி பெற்று தேறியுள்ள திறமையானவர்கள் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று அறிகிறேன். (சிரிப்பு).

Educational concessions to children of Political sufferers.

* 431 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the expenditure incurred by the Government by way of granting educational concessions to sons and daughters of Political sufferers for the periods 1971–72 and 1972–73 ?